Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 9.6.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 9.6.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டில் உள்ள 140 கோடி மக்களின் பங்களிப்பு, ஆற்றல், ஆகியவற்றால் இந்தியா வேகமாக முன்னேறி உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பகவான் பிர்சா முண்டாவின் 125-ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

புதுச்சேரியில் தேசிய இ.விதான் செயலியை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று துவக்கி வைத்தார்.

புதுச்சேரியில் வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்-பிரச்சார இயக்கம், இன்று கிருமாம்பாக்கம், பிள்ளையார் குப்பம், உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது.

மோடி-வடகிழக்கு

நாட்டில் உள்ள 140 கோடி மக்களின் பங்களிப்பு, ஆற்றல், பல்துறை வளர்ச்சி ஆகியவற்றால் இந்தியா துரிதமாக முன்னேறி உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.பொருளாதார வளர்ச்சி தொடங்கி, சமூக மேம்பாடு வரை அனைத்தும் மக்கள் நலன் சார்ந்த

நடவடிக்கைகளாக கருதி முன்னுரிமை அளிக்கப்பட்டு முழுமையான மேம்பாட்டை நாடு கண்டுள்ளதாகவும் பிரதமர் கூறி உள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி பயணத்தில் குறிப்பிடத் தக்க மாற்றத்தை இந்தியா அடைந்துள்ளதாக பிரதமர் கூறினார். இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு.

(வாய்ஸ்)

*மோடி-வடகிழக்கு-2 (20) (வாய்ஸ்)*

கடந்த 11 ஆண்டுகளில் சேவா, சுஷாசன் போன்ற கரிப் கல்யாண் கொள்கைகளால் வடகிழக்கு மாநிலங்களில் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், முன்னேற்றத்தின் அடையாளமாக அப்பகுதிகள் உயர்ந்து நிற்கின்றன என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. வடகிழக்கில் உள்கட்டமைப்பு மூலம் மட்டுமல்லாமல் வன் தன் யோஜனா திட்டத்தின் மூலம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பழங்குடியினர் ஆதரிக்கப்பட்டுள்ளனர். 434 விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இப்பகுதிகள் கரிம விளை பொருட்கள், சமையல் எண்ணெய் மற்றும் மூங்கில், உள்ளிட்ட பாரம்பரிய பொருட்களுக்கான மையமாக வளர்ந்துள்ளது. உள்ளூர் கைவினைக் கலைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் பெருமளவு பயன் அடைந்துள்ளனர். கல்வி மற்றும் சுகாதாரத்தில் சீராக மேம்பட்டு இந்த வடகிழக்கு மாநிலங்கள் எழுத்தறிவு

விகிதத்தில் உயர்ந்துள்ளன. மேலும் உல்லாஸ் மிஷினின் கீழ் மிசோரம் முழு கல்வி அறிவு பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அசாமில் 15 மருத்துவமனைகளுடன் தெற்காசியாவின் மிகப் பெரிய புற்றுநோய் பராமரிப்பு வலை அமைப்பை கொண்டுள்ளது சிறப்பு அம்சமாகும். மேலும் கடந்த 10 ஆண்டுகளில் இந்த வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சார விழாக்கள், அருங்காட்சியக திட்டங்கள் நாட்டின் வளர்ச்சி பாதையில் பன்முகத் தன்மை கொண்ட பகுதிகளாக மாறி உள்ளது குறிப்பிடத் தக்கது.

*பிரதமர் நமோ செயலி*

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணம் குறித்து நமோ செயலி மூலம் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். இந்தியாவின் வளர்ச்சி பயணம் குறித்து ஜன் மன் கணக்கெடுப்பு மூலம் நாட்டில் உள்ள அனைவரும் பங்கேற்க கூடிய போர்ட்டலையும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ளார்.

*பிர்சா முண்டா*

பகவான் பிர்சா முண்டாவின் 125-ஆவது நினைவு தினமான இன்று தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுவதை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தினார். சுதந்திரப் போராட்டத்தின் மாபெரும் தியாகியான பிர்சா முண்டா, பழங்குடியின சகோதர-சகோதரிகளின் நலனுக்காகவும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்ததாக பிரதமர்

தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவரது தியாகமும் பக்தியும் நாட்டு மக்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் கூறி உள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பிர்சா முண்டா குறித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பழங்குடியின சமூகத்தை சுயமரியாதை கொண்ட சமூகமாக மாற்றியதில் அவரது பங்களிப்பு என்றென்றும் நினைவு கூரப்படும் என்று புகழாரம் சூட்டி உள்ளார்.

ரேகா குப்தா

நகரின் சுற்றுச் சூழலை மேம்படுத்துவதற்காக 70 லட்சம் மரங்களை நடுவதற்கு டெல்லி அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார். தாயின் பெயரில் மரம் நடும் திட்டத்தின் கீழ் இன்று புதுடெல்லியின் ஷாலிமார் பாக் நகரில் உள்ள அரசு பள்ளியில் திருமதி ரேகா குப்தா தமது தாயாரின் நினைவாக ஒரு சிந்தூர் செடியை நட்டார். மேலும் இத்திட்டத்தில் கல்வித் துறையும், பள்ளிகளும் பங்கேற்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

முருகன்

புதுச்சேரி சட்டப் பேரவையில் தேசிய இ.விதான் செயலியை மத்திய பாராளுமன்ற விவகாரங்கள் துறை மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று துவக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் பிரதமர் மோடி அரசின் 11-ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி பெருமிதம் தெரிவித்தார். 3-ஆவது முறையாக பிரதமராக

தேர்ந்தெடுக்கப்பட்ட திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ் இந்தியாவில் 27 கோடி பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருந்து மீட்கப்பட்டு ள்ளதாகவும், மின்சாரம் இல்லாத வீடு இல்லை என்ற சூழலை பிரதமர் உருவாக்கி உள்ளதாகவும் கூறினார். மேலும் அவர் கூறுகையில் .

(வாய்ஸ்)

கைலாஷ்நாதன்

நிகழ்ச்சியில் பேசிய துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், புதுச்சேரி சட்டப்பேரவை வரலாற்றில் இன்று ஒரு முக்கியமான நாள் என்றும், இ. விதான் செயலி நாட்டிலேயே முதன் முறையாக புதுச்சேரியில் தான் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறினார். தொடர்ந்து பேசிய அவர் .

(வாய்ஸ்)

தொடர்ந்து பேசிய முதலமைச்சர் திரு ரங்கசாமி, 2047-ஆம் ஆண்டில் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக இருக்க வேண்டும் என்ற பிரதமரின் எண்ணத்திற்கு ஏற்ப இந்த இ.விதான் செயலி தொடங்கப்பட்டுள்ளது என்றார். மேலும் அவர் கூறுகையில் .

(வாய்ஸ்)

இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, தலைமை செயலர் திரு சரத் சவ்கான், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

*விக்சித் கிரிஷி*

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரஷி சங்கல்ப் அபியான்-பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், கிருமாம்பாக்கம், பிள்ளையார் குப்பம், ஆலடி மேடு, பன்னித் திட்டு, மற்றும் நரம்பை உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் வித்யா ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை நிபுணர் டாக்டர் பி.டி. சித்ரா, வேளாண் அதிகாரிகள் திருமதி வளர்மதி, மற்றும் திருமதி சுபநம்தி, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் 7 பெண்கள், 143 ஆண் விவசாயிகள், மற்றும் 9 வேளாண் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு, அசோலா சாகுபடி

மற்றும் கால்நடை உற்பத்தியில் கனிம கலவையின் முக்கியத்துவம், பயிர் பூச்சி மேலாண்மை, மண் சுகாதார அட்டைகளின் முக்கியத் துவம் மற்றும் மாநில அரசின் விவசாயம் தொடர்பான பல்வேறு திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் டாக்டர் விஜயகுமார் விவசாயிகளிடம், வேளாண் குறித்த தகவல்களை, காமராசர் வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

*காரைக்கால்*

காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ சமுதாய மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிறுவனமான மீன்வளம் மற்றும் கடல் வாழ் தொழில் நுட்ப பொறியியல் பயிற்சி நிறுவனத்தில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அத்துறையின் துணை இயக்குநர் திரு கோவிந்தசாமி செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். 2 ஆண்டுகால வகுப்பான மீன்பிடிக் கலன், மாலுமி பயிற்சி மற்றும் கடல் சார் பொறுத்துனர் பயிற்சி ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் வரும் 16-ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அத்துறையின் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*பியூஷ்கோயல்*

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் இன்று சுவிட்சர்லாந் மற்றும் சுவிடனுக்கு பயணம்

மேற்கொண்டுள்ளார். இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துவதற்காக சுவிட்சர்லாந்தில் உள்ள உலகளாவிய தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் தொழில் துறை தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்த உள்ளார். சுவீடனில் நடைபெறும் பொருளாதார தொழில் துறை மற்றும் அறிவியல் ஒத்துழைப்புக்கான இந்திய- ஸ்வீடிஷ் கூட்டு ஆணையத்தின் 21-ஆவது அமர்வில் அவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.

விளையாட்டு

ஆம்ஸ்டெல்வின்-ல் நடைபெறும் ஆடவர் புரோலீக் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

ஜெர்மனியில் நடைபெறும் ஸ்டட்கார்ட் ஓபன் டென்னீஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரோஹன் போன்னா, யூகி பாம்ரி ஆகியோர் நாளை களம் இறங்குகின்றனர்.

தலைப்புச் செய்திகள்

நாட்டில் உள்ள 140 கோடி மக்களின் பங்களிப்பு, ஆற்றல், ஆகியவற்றால் இந்தியா வேகமாக முன்னேறி உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பகவான் பிர்சா முண்டாவின் 125-ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

புதுச்சேரியில் தேசிய இ.விதான் செயலியை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று துவக்கி வைத்தார்.

புதுச்சேரியில் வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்-பிரச்சார இயக்கம், இன்று கிருமாம்பாக்கம், பிள்ளையார் குப்பம், உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 9.6.2025/Script.

----------------------------